மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையை ஏற்றுமதி செய்வது என்பது மத்திய அரசின் பொறுப்பிலே இருக்கின்றது. வரியினை மட்டும்தான் நாம் போடுகிறோம். ஆனால் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிப்பதற்காக அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஏனவே குறிப்பாக எங்கேயவது ஏமாற்றப்படுகின்றது என்று தெரிவித்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே, இதுபற்றிய ஒரு கூட்டம் டெல்லியிலே நடந்ததாகச் சொல்லப் படுகின்றதே, அந்தக் கூட்டத்தைக் கூட்டியது யார்? அந்தக் கூட்டம் எப்போது நடந்தது? தேயிலையின் மீது இவ்வாறு வரி குறைப்பு செய்தால அதனால் ஆண்டு வாரியாக எவ்வளவு வருவாய் வருகின்றது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தேயிலையின் மூலமாக நமக்கு எவ்வளவு வருவாய் வருகின்றது என்றால் மொத்தமாக 1978-79-ல் 315 இலட்சம் ரூபாய். 1979—80-ல்278 இலட்ச ரூபாய் 1980-81-ல் 305 இலட்சம் ரூபாய். வரியினைக் குறைத்ததற்குப் பிறகு இவ்வாண்டு வருமானம் 439 இலட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டைத் தொகுதியில் வெள்ளத்தினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்கும் திட்டம்

வினா எண். 64 திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் பொதுவாக வெள்ளத்தால் சைதாப்பேட்டை தொகுதி பெருவாரியாக பாதிக்கப்படுகின்றதே அதற்காக அரசிடம் நிரந்தர நடவடிக்கை எடுக்க ஏதேனும் செயற் குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைத் தொகுதியில் உள்ள அடையாறு ஆற்றின் கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களை ஆற்று வெள்ளத்திலிருந்து பாதுகாக்க நீண்ட கற்சுவர் ஆற்றின் கரையோரத்தில் கட்டப் பட்டது. மேலும் தற்போது உலக வங்கித் திட்டத்தின் கீழ்த் மாம்பலம், நந்தனம் திறந்த கழிவுநீர்க் கால்வாய்த் திட்டம்

செயல் படுத்தப்பட்டு வருவதால் இந்தத் திட்டத்தின் மூலம் நீர்தேக்கம் இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்:— பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எனக்குச் சரியாகப் புரியவில்லை. இருந்தாலும் ஆண்டுதோறும் மழையாலே பாதிக்கப்பட்டு சைதாப்பேட்டையிலே உள்ள.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பதிலே புரியவில்லை என்றால் அதைத் தொடர்ந்து எவ்வாறு கேள்வி கேட்க முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத்தலைவர் அவர்களே, நான் உறுப்பினர் அவர்களுக்குப் புரிய வைக்க முயற்சி செய்கிறேன். முடிந்தால், நான் அதில் வெற்றி பெறுகிறேன். அவர்கள் எந்த இடத்தில் புரியவில்லை என்று சொன்னால் அதை மீண்டும் அவர்களுக்குப் புரியும்படி சொல்கிறேன்.

திரு. புருஷோத்தமன்.— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை தொகுதியிலே அடையாற்றினை ஒட்டியுள்ள திரூர் நகர், கோட்டூர்புரம், சின்னமலை போன்ற பகுதிகளை ஒட்டியுள்ளபகுதிகள் பள்ளமாகஇருப்பதன் காரணத்தால் ஆண்டு தோறும் அங்கே வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் நிவாரணம் தரப்பட்டு அரசியினுடைய பெரும் பணம் செலவாகின்றது' அரிசி கொடுக்கிறோம், புடவை, வேட்டி கொடுக்கிறோம், பல்பொடி கொடுக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; உங்கள் கேள்வி என்ன? சைதாப்பேட்டை தொகுதியைப் பற்றி வேறு நேரத்தில் பேசிக் கொள்ளலாம். கேள்வியை மட்டும் இப்போது கேளுங்கள்.

திரு. து புருஷோத்தமன்— பள்ளமாக இருக்கும் பகுதியில் நீர் தேங்காமல் இருப்பதைத்தடுக்க வேண்டும். வேளச்சேரி பகுதியில் ஏரியில் எல்லாம் லே அவுட் போட்டு வீடுகள் கட்டுகிறார்கள். அங்கு ஏற்படும் இழப்புகளுக்கு அரசு நிவாரணம் கொடுக்கிறது. இதை எல்லாம் தடுக்க அரசு முன்வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்? ஸ்டாம்வாட்டர் டிரைனேஜ் அமைத்து நீர் தேங்காமல் தடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர் புரிந்துக் கொள்ளவில்லை என்பதை இப்போது நான், புரிந்துக் கொண்டேன். நான படித்த போதே சொன்னேன் உலக வங்கி மூலம் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருசோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் படிக்கின்ற போது ஒன்றைத் தெரிந்துக் கொண்டேன். அதாவது தடுப்புச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது என்று. அது, தி. மு. க. ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலக வங்கி மூலம் பணம் பெற்று அதைச் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்,

திரு. து. புருஷோத்தமன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. காலத்தில் அந்த கரையோரப் பகுதிகளில் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து நாங்கள் பல முறை அந்தப் பகுதிகளில் ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். உலக வங்கி மூலம் பணம் பெற்று செய்வதற்கு முன்பே இந்த அரசு பணம் செலுத்தி அந்தப் பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமா எ பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச்சுவர் கட்டப்பட்டது என்று தான் தெரிவித்தேன். அதை அ.இ.அ.தி.மு.க, கட்டியதா? தி.மு.க. கட்டியதா என்று நான் தெரிவிக்கவில்லை. அது தி.மு.க.ஆட்சியில் கட்டப்பட்டதா? இல்லை காங்கிரஸ் ஆட்சியில் கூட கட்டியிருக்கலாம். அந்தப் புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. உலக வங்கி திட்டத்தின்கீழ் அந்த நீர்த்தோக்கப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்க எல்லா விதமான முயற்சிகளும் எடுக்கப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு கரையோரங்களிலுள்ள குடிமைப் பதிகளை மேம்படுத்தும் திட்டம்.

வினா எண். 71—திரு ச. பாலகிருஷ்ணன்; மாண்மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அடையாறு கரை ஓரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக எவ்வளவு தொகை செலவிடப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—

(அ) அடையாறு கரை ஓரத்தில் மொத்தம் 26 குடிசைப் பகுதிகள் உள்ளன. அவற்றில் அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள 12 குடிசைப்பகுதிகளை மேம் படுத்தும் திட்டம் உண்டு.